செய்தி வெளியீடு எண்: 29 நாள்: 20.11.2019

**தேனி மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**

**66-ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவில்**

**551 பயனாளிகளுக்கு ரூ.7.49 கோடி மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கினார்:-**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தேனி என்.ஆர்.டி. மக்கள் மன்றத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.11.2019) நடைபெற்ற 66-ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவில் மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தேனி மாவட்ட இணைப்புச் சங்கங்களின் மூலம் 551 பயனாளிகளுக்கு ரூ.7.49 கோடி மதிப்பிலான கடன் உதவிகளையும், 2018-2019ம் நிதியாண்டில் சிறப்பாக சேவை புரிந்த 17 கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டு கேடயங்களையும், 4 சிறந்த விற்பனையாளர்களுக்கு நினைவு பரிசுகளையும், 3 சிறந்த பொது சேவை மையங்களுக்கு நினைவு பரிசுகளையும், கூட்டுறவு வாரவிழாவை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற 23 பள்ளி, கல்லூரி, கூட்டுறவு பட்டய பயிற்சி மாணவ, மாணவியர்கள் மற்றும் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களையும், 2018-19-ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களின் 7 குழுந்தைகளுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்களையும் மற்றும் தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பில் மாற்றுத்திறனாளிகள் ரூ.25,000/- மானியத்துடன் ஆவின் பாலகம் நடத்தும் திட்டத்தினை தொடங்கி வைத்து, அதற்கான அனுமதி ஆணையினை 4 மாற்றுத்திறனாளிகளுக்கும், சுய தொழில் செய்யும் முனைவோர்கள் 4 நபர்களுக்கு ஆவீன் பாலகம் நடத்துவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

இவ்விழாவில் **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள்** பேசும் போது தெரிவித்ததாவது,

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டு கொண்டிருக்கும் தமிழக அரசு, கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக ஊரகப்பகுதியில் உள்ள மக்களுக்கு பல்வேறு கடன் வசதிகளை அளித்தும், சிறு குறு விவசாயிகளுக்கு கடன்களை வழங்கியும், நுகர்வோர் மற்றும் பொதுமக்களின் பொருளாதார மேம்பாட்டிற்குரிய சேவை ஆற்றியும் மகத்தான சாதனைகளை புரிந்து வருகிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர் கடன், நகை ஈட்டின் பேரில் பயிர் கடன், உரம், விதை உள்ளீட்ட வேளாண் இடுபொருட்கள் விற்பனை, வேளாண் விளை பொருட்கள் சந்தைப்படுத்துதல், உதவிக்குழுக்கள், கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்கு கடன் வழங்குதல், டாப்செட்கோ, டாம்கோ திட்டங்களின் கீழ் கடன் வழங்குதல், மத்திய காலக்கடன்கள் வழங்குதல் உள்ளீட்ட பலத்திட்டங்களின் மூலம் ஊரகப் பொருளாதாரம் மேம்படவும், வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கை தரம் உயரவும், எண்ணற்ற திட்டங்கள் அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தேனி மாவட்டத்தில் இயங்கி வரும் 80 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கும் பணி செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளால் பெறப்பட்ட 31.03.2016 அன்று வரை நிலுவையிலிருந்த 12,488 உறுப்பினர்களின் வேளாண் கடன் நிலுவைத் தொகை ரூ.85.51 கோடி மதிப்பீட்டில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தவணைத் தேதிக்குள் பெற்ற பயிர்கடன் தொகையை திருப்பி செலுத்தும் விவசாயிகள் இக்கடனுக்குரிய 7 விழுக்காடு வட்டியினை சங்கத்திற்கு செலுத்த வேண்டியதில்லை. மேலும் அத்தொகைக்கான வட்டியினை அரசே சங்கத்திற்கு செலுத்துகிறது. இதன் மூலம் விவசாயிகள் கட்ட வேண்டிய விவசாயிகளுக்கான வட்டி சுமையினை மாண்புமிகு அம்மா அவர்களது அரசே ஏற்று தேனி மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின் சுமையை வெகுவாக குறைத்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் 76 கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அக்டோபர் – 2019 வரை சங்கங்களில் பயிர் கடன் பெற்ற விவசாயிகளில் 6,30,058 நபர்களுக்கு 2620 மெட்ரிக் டன் அளவில் ரூ.4.81 கோடி மதிப்பிலான உர விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அரசின் மின்னணு ஆளுமை திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் 72 கூட்டுறவு நிறுவனங்களில் பொது சேவை மையங்கள் நிறுவப்பட்டு, பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ் பெற்று வழங்குதல் மற்றும் பல்வேறு அரசு நலத்திட்டங்களை பெற உரிய விண்ணப்பங்களை பெறுதல் உள்ளீட்ட இணையதள சேவைகள் இச்சேவை மையங்கள் மூலம் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன.

தேனி மாவட்டத்தில் இச்சேவை மையங்கள் மூலமாக நடப்பு நிதியாண்டில் 42,963 எண்ணிக்கையிலான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் நாளது தேதி வரை கூட்டுறவுத்துறை கட்டுப்பாட்டில் 496 நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 3,79,603 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. 90.90 விழுக்காடு குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு அட்டை வழங்கப்பட்டுள்ளது. முதியோர் ஒய்வூதிய திட்டம், வருவாய்த்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சமுதாய பாதுகாப்பு திட்டமாகும். இருப்பினும் தமிழகத்திலேயே முதல் முறையாக தேனி மாவட்டத்தில் ஜனவரி 2018 முதல் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 10 கிளைகள் மூலம் 6898 பயனாளிகளுக்கு ரூ.1,000 வீதம் மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் தேனி மாவட்டம் முன்னோடி மாவட்டமாக செயல்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு குறைந்த விலையில் தரமான மருந்து வகைகள் கிடைக்கச் செய்திட தேனி மாவட்டத்தில் பெரியகுளம், போடிநாயக்கனூர், சின்னமனூர் ஆகிய மூன்று நகராட்சிகளில் தலா 1 வீதம் அம்மா கூட்டுறவு மருந்தங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், 6 கூட்டுறவு மருந்துக்கடைகள், கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. தேனி, ஆண்டிபட்டி, பெரியகுளம், போடிநாயக்கனூர், உத்தமபாளையம் மற்றும் கம்பம் என மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் மருந்தகங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இம்மருந்தகங்களில் 20 சதவிகிதம் வரை தள்ளுபடி அளிக்கப்பட்டு பொதுமக்களுக்கு இம்மருந்தகங்கள் பேருதவியாக அமைந்துள்ளது.

மேலும், சிறுவணிகர்களின் தொழில் மேம்பாட்டிற்கு உதவும் பொருட்டு சிறு வணிககடன் ரூ.25,000 வழங்கப்பட்டு வந்தது, அவர்களின் வியாபார நடவடிக்கைகள் மேம்பட வழிவகை செய்திட இக்கடன் தொகை தற்போது ரூ.50,000-மாக உயர்த்தி வழங்கிட அம்மா அவர்களது அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மத்தியக்காலக்கடன்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மட்டுமின்றி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் கிளைகள் மூலமாகவும் வழங்க தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆடு, மாடு மற்றும் வளர்ப்பு கடன், வீடு கட்டும் கடன், வேளாண் அபிவிருத்தி கடன் முதலியவை பொதுமக்களுக்கு விரைவில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) கடன் வழங்கல் திட்டத்தின் கீழ் புதியதாக தொழில் தொடங்கிட உள்ளவர்களுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் மூலம் ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், ரூ.100 கோடிக்கு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தைச் சார்ந்த புதுமை சிந்தனைகளுடன் புதிய தொழில் தொடங்கிட ஆவர்முடைய, துடிப்பு மிக்க இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும், இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தனிநபர் நகைக்கடன் வழங்கலில் ஏற்கனவே இருந்த உச்சவரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. உறுப்பினர்களுக்கு நகை ஈட்டின் பேரிலான காசுக்கடன்கள் குறைந்த பட்சம் ரூ.50 ஆயிரத்திலிருந்து அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை வழங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

தானிய ஈட்டின் பேரிலான கடன் வழங்கலில் ஏற்கனவே இருந்த உச்ச வரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கூட்டுறவு சிக்கன நாயணச்சங்கங்கள் மூலம் நிரந்தர பணியில் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பொதுத்துறை நிறுவன பணியாளர்களுக்கு வழங்கப்படும் கடன் உச்ச வரம்பு ரூ.7 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மகளிர் தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படும் கடன் உச்ச வரம்பு ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் தொழில் தொடங்கிடவும், அவர்களின் பொருளாதார தற்சார்பை மேம்படுத்திடவும், டாம்கோ மற்றும் டாப்செட்கோ திட்டங்களின் கீழ் திட்ட அறிக்கையின் அடிப்படையில் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இன்று மிக சிறப்புடன் நடைபெற்று கொண்டிருக்கும் 66-ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவின் முத்தாய்ப்பாக இவ்விழா மூலம் 551 பயனாளிகளுக்கு ரூ.7.49 கோடி மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் வழிக்காட்டுதலின்படி, சீரிய முறையில் இயங்கி வரும் இவ்வரசு கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் தமிழக மக்களின் பங்களிப்புடனும் கூட்டுறவு இயக்கமானது அனைத்து வகையிலும் உயரத்தை எட்டியுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு புதுமையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், குறிப்பாக சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரின் மேம்பாட்டிற்காக கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்ந்து அரும் பணியாற்றி வருகின்றன. அத்தகை கூட்டுறவுகளின் பணி அவசியம் என்பதை வலியுறுத்தி இன்று கடன் உதவி பெறும் விவசாய பெருங்குடி மக்களும், மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகளும் மற்ற நண்பர்களும் தாங்கள் பெற்ற கடன் தொகையினை சிறப்பான முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும் எனவும், வாங்கிய கடனை உரிய கால அவகாசத்திற்குள் திரும்ப செலுத்தி மேலும், கூடுதலான நிதியை பெறுகின்ற உரிமையை பெற்று அதன் மூலமாக தங்களது வாழக்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இவ்விழாவில், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், பெரியகுளம் சார் ஆட்சியர் ச.சிநேகா, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில கூட்டுறவு நூற்பாலை இணையத்தலைவர் ஜி.திருலோகசந்தர், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் எம்.எஸ்.பாண்டியன், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் ஆர்.ராஜகுரு, தேனி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் க.ஜெயலட்சுமி கணேசன், உத்தமபாளையம் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் பி.ஆர்.பி.அழகர்ராஜா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவ.முத்துகுமாரசுவாமி, துணைப்பதிவாளர்கள் எஸ்.எம்.சலீம், நா.முத்துக்குமார், இரா.மணிகண்டன், வே.உதயகுமார், மாவட்ட கூட்றவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் த.ராமகிருஷ்ணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி.எம்.சையதுகான், ஆர்.பார்த்திபன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**